## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

## C.C. No. 12/2025

LW : 24 PW : 22

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. மணிமேகலை | த / பெ. | திரு. ராமலிங்கம் |
| கிராமம் | : | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | காவல்ஆய்வாளர் | வயது | 44 |

08.10.2025.

LW : 24 PW: 22

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல்விசாரணை**

நான் தற்போது திருவாரூர் சைபர் கிரைம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.02.2021 ஆம் தேதி திருவாரூர் வணிக குற்றபுலனாய்வுத்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது சென்னை வணிக குற்றப்புலனாய்வு காவல் கண்காணிப்பாளரிடமிருந்து வரப்பெற்ற CAS No. 107/20 / SP / CCIW– CID/CSR / 20, dated 05.02.2021 ன்படி வரப்பெற்ற துணைபதிவாளர், கூட்டுறவு துறை திரு. கார்த்திகேயன் அவர்களின் ந.க.எண். 1032/2020 ச.ப. நாள் 22.09.2020 ன்படி உள்ள புகாரினை பெற்று Z764 வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் பணியாளர்கள் கூட்டுறவு மற்றும் கடன் சங்கத்தில் பிரிவு 81ன் கீழ் விசாரணை செய்து எதிரியாக சங்கத்தில் பணிபுரிந்த கவிதா, க/பெ. சக்திவேல் என்பவர் 2 இனங்களில் ரூ.20,74,827/– தொகையை கையாடல்

செய்ததாக கொடுத்த புகாரினை பெற்று வணிக குற்றப்புலனாய்வு குற்ற எண் 1/2021 ச/பி 408, 409, 465, 468, 471, 477A இதச பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அதசாஆ 89** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 26.02.2021 அன்று புகார்தாரரான கூட்டுறவு துணைபதிவாளர் அசா 1 திரு. கார்த்திகேயனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 23.03.2021 அன்று வழக்கின் எதிரியாக குறிப்பிடப்பட்ட திருமதி. கவிதா, க/பெ. சக்திவேல், 5/126, கிழக்கு தெரு, சாக்கோட்டை என்ற முகவரியில் வசித்தவரை குடவாசல் ஓகை அருகே 12.45 மணிக்கு எதிரியை அடையாளம் கண்டு குற்றகாரணம் கூறி கைதுசெய்தேன். பிறகு எதிரியை பாராவிடம் ஒப்படைத்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன்.

30.04.2021 அன்று இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட Z764 வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் பணியாளர்கள் கூட்டுறவு மற்றும் கடன் சங்கத்தின் உறுப்பினர்களான உறுப்பினர் எண் 1579 அசா 2 விஜயகுமாரி, மூலவாஞ்சேரியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வந்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே உறுப்பினர் எண் L166 அசா 5 ராஜகுமாரி கொட்டியபடுகையில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே உறுப்பினர் எண் 1756 அசா 18 கலா நல்லூர் நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே உறுப்பினர் எண் L613 அசா 3 திலகவதி நல்லூர் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். 07.05.2021 அன்று உறுப்பினர் எண் 1819 அசா 14 ஜெயக்கொடி பாடகச்சேரி நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்தவரை

விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே உறுப்பினர் எண் L150 அசா 7 சீனிவாசன், த/பெ. கோவிந்தசாமி உத்தமதானபுரத்தில் ஆசிரியராக பணிபுரிந்ததவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே உறுப்பினர் எண் L1790 அசா 9 விஜயபாலன் உத்தமதானபுரத்தில் ஆசிரியராக பணிபுரிந்ததவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

அன்றைய தினமே உறுப்பினர் எண் 1775 அசா 12 அருள்மாறன், மனப்படுகை நிர்மலா உதவிபெறும் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்ததவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

எனது விசாரணை முடித்து நான் மாற்றுப்பணியில் வேறொரு காவல்நிலையத்திற்கு சென்றதால் வழக்கு கோப்புகளை ஆய்வாளர் திரு.பெரியய்யா அவர்களிடம் ஒப்படைத்து வழக்கின் விவரம் கூறினேன்.

**எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.10.08 15:52:51 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.